## ஜூன் - 29

**"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்."**

**- மத் 5 : 8**

"இருதயத்தின் சுத்தம்" என்பதின் கருத்து, நடத்தையின் பூரணம் அல்ல, வார்த்தையின் பூரணமும் அல்ல, எண்ணத்தின் பூரணமுமல்ல, ஆனால் இவைகள் எல்லாவற்றின் சம்பந்தமாகவுள்ள நோக்கத்தின் பூரணமாகும். நம்முடைய விருப்பமும் முயற்சியும், எண்ணத்திலும், வார்த்தையிலும், கிரியையிலும் பூரணமடைவதற்காக இருக்க வேண்டும். நம்முடைய இருதயமும் சித்தமும் சம்மதம் தெரிவிக்கிறதும், நம்முன்னால் இருக்க வேண்டியதுமான திட்ட அளவு தெய்வீக திட்ட அளவாகும். "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்."(மத் 5 : 48) இந்த பூரண நிலைக்குக் குறைந்தத் திட்ட அளவை தேவன் நமக்கு வைக்கவில்லை. ஆனால் கிறிஸ்து மூலமாக நமக்காக கிருபையையும் இரக்கத்தையும் சமாதானத்தையும் வைத்திருக்கிறார். நாம் அவருடைய அடிச்சுவடுகளில் நடந்தோமானால் நெருக்கமான வழியில் நடக்க இந்த இருதயத்தின் பரிசுத்தமே முக்கியமான அடிச்சுவடுகளில் ஒன்றாகும்.

**- Z '00, 71 (R 2585).**

இருதயசுத்தம் நல்ல நோக்கமுள்ளவர்களாயிருப்பதைக் குறிக்கிறது. இது தேவனையே மகிமைப்படுத்த ஒரே நோக்கத்தையுடையவர்களாய் இருப்பதைக் குறிக்கிறது. இது தேவனிடத்தில் உண்மைபற்றுள்ளவர்களாயிருப்பதற்குரிய நிபந்தனைகளுக்கு நம்முடைய நடத்தையை கட்டாயப்படுத்தும், இப்படிப்பட்ட இருதயம், இதை உடையவர்களை உண்மையாகவே சந்தோஷப்படுத்தும். இப்படிப்பட்ட இருதயத்தை உடையவர்கள் இப்பொழுது தேவனைத் தங்களுடைய அறிவின் கண்களால் பார்க்கிறார்கள். தெரிந்து கொள்ளப்பட்ட எல்லாரும் கடைசியில் அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைப் பார்ப்பார்கள்.

**-P '33, 79, 80.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

சங் 15:2; 19:8; 24:3-5; 51:7; நீதி 21:8; மல் 3:2,3; யோவா 15:12; 1தீமோ 1:5; பிலி 4:8; 2தீமோ 2:21,22; தீத் 1:15; 1பேது 1:22; 1யோவா 3:3; 1கொரி 13:12; 1யோவா 3:2.

**கோபுர வாசிப்பு :** Z '12, 389 (R 5148)

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வார அனுபவங்கள் எவை? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவை எதில் முடிந்தன?